விலை: 30.00
பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 025 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 29 வியாழக்கிழமை (13.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




யாழ்., கிளிநொச்சியை சேர்ந்த

## 5 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 5 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த கைதிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.**

சட்டமா அதிபரின் ஆலோசனையின்படி, குறித்த நபர்களை விடுவிக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பளை, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு எதுவும் பதிவு செய்யப்படாமல் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் ஐவரும் நேற்று முன்தினம் மனித உரிமைகள்

15

வெலிக்கடை படுகொலை வழக்கு

## முன்னாள் சிறைச்சாலை ஆணையாளருக்கு மரண தண்டனை

(கொழும்பு)

கடந்த 2012ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவுக்கு மரண தண்டனை விதித்து, கொழும்பு விசேட மேல் நீதிமன்றம், நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இதேவேளை,

15

## உடம்புக்குள் துணியை வைத்து சத்திர சிகிச்சை

பருத்தித்துறையில் பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

உடம்புக்குள் துணியை வைத்து சத்திர சிகிச்சை செய்த தன் காரணமாக ஏற்பட்ட கிருமித் தொற்றால் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை யாக்கருவைச் சேர்ந்த மனோன்மணி குலவீரசிங்கம் (வயது-60) என்ற பெண்ணே

14




## ராஜபக்ஷ அரசாங்கம் தோல்வி அடைந்துவிட்டது

யாழில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(யாழ்ப்பாணம்)

ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு தோற்றுப் போன அரசு எனவும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களும் தோற்றுவிட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் - நல்லூர் இளங் கலைஞர் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்

15

## யாழ். பல்கலை மாணவர்கள் இடையே மோதல்

இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில். யாழ்.

15

தவறுதலான தொலைபேசி அழைப்பால்

## அறிமுகமான காதலனால் 18 வயது யுவதி கூட்டு வன்புணர்வு

(யாழ்ப்பாணம்)

தவறுதலான தொலைபேசி அழைப்பின் (miss Call) ஊடாக அறிமுகமான காதலனை நம்பி சென்ற 18 வயது யுவதி நான்கு பேரால் கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பாதிக்கப்பட்ட குறித்த யுவதி நேற்று

15

## அனைத்து பிரச்சினைக்கும் இவ்வருடத்துக்குள் தீர்வு

பிரதமர் மகிந்த உறுதி



(கொழும்பு)

நாட்டில் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரி

15

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

TRC/D/PRO/21/09

Dialog
எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா... உங்கள் நாளிதழ்

# H.A.C

சித்தன்கேணி

யாழ். முன்னணி ஆசிரியரின் சேவை

வலி. மேற்கில்

**வணிக கல்வி N.S. கபில்**

**BBM(Hons), SPL. in MAR.**

(9625) நிர்வாகி



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ பண்டத்தரிப்பு

பெண்கள் உயர்தரப் பாடசாலை யின்

ஆசிரியர்

திரு. **மரியநாயகம் ஜோன்சன் மரின்**

(B.A., LLB, NDT, NDE, Dip. in Psychology)

அவர்கள்

**Attorney at law**

பட்டத்தினை பெற்றமையினையிட்டு மகிழ்வடைவதுடன் மேலும் பல பட்டங்களை பெற வாழ்த்துகின்றோம்.

(9439)

வாழ்த்துவோர் :

ஆசிரியர் கழகம்

யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை

# அந்தியேட்டி அழைப்பு



14.12.2021 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பக் குலவிளக்கு

திருநிறைச் செல்வன்

## குகநேசன் சாரங்கன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக்கிழமை மொன்றியல், கனடாவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அத்துடன் ஞாயிற்றுக்கிழமை (16.01.2022) நண்பகல் 12.00 மணியளவில் துன்னாலை கரவெட்டியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இ)

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி கந்தையா செவ்வந்தியம்மா

(காரைநகர்)

காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் றோட், சிவகுருநாதர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செவ்வந்தியம்மா அவர்கள் கடந்த 10.01.2022 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் முத்துக்குமாரு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையா (CTB) அவர்களின் அன்பு மனைவியும் ஞானசௌந்தரம்மா, காலஞ்சென்ற கனகலிங்கம், சரோஜினிதேவி, சுந்தரேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலினி (UK), யாழினி (சிரேஷ்ட உத்தியோகத்தர் - தேசிய சேமிப்பு வங்கி, மானிப்பாய்), நாகேந்திரன் (சட்டத்தரணி - UK), கமலேந்திரன் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார் (பொறியியலாளர்-UK), ஐங்கரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), பகீரதி (Engineer - UK), காயத்திரி (Chemist - Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும் கிஷாந், றுஷாந், லக்ஷிகா, யஸ்விந், தாராதேவி, லக்ஷ்மிகா, அஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் யாழ். பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 20/3, சிவகுருநாதர் வீதி,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

(C-3504) 021 221 7632

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா செல்லையா



அல்லையம்பதி துன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்திரவேலாயுதர் கோவிலடி மீசாலை கிழக்கு, மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா செல்லையா நேற்று (12.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் மகேஸ்வரன் (தலைவர் - சாவகச்சேரி ப. நோ.கூ. சங்கம்), தங்கவடிவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருஸ்ணகுமாரி, கிருபாநந்தினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் மயூரன் (மயூரா தொலைத் தொடர்பு நிலையம், அல்லையம்பதி), ஆரணி, ஞானகரன் (கனடா), எழில்வாணி (ஆசிரியை - மு/ உடையார்கட்டு அ.த.க. பாடசாலை), பொழிலன் (பிரான்ஸ்), சங்கவி (பிரான்ஸ்), காயத்திரி (தாதிய உத்தி யோகத்தர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை), நிறோசன், தர்சிகா (கனடா), வரதரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தேவகி, கவிநயா, செங்கோடன், மகிழ்நிலா, பவிநிலா, கிருத்திக் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.01.2022) வியாழக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புகழுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப் பெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C3518)

சித்திரவேலாயுதர் கோவிலடி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

மகன்
077 371 6480


தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டம் நிரந்தரத் தீர்வல்ல

## தமிழினத்திற்கான தீர்வை சர்வதேசத்தினூடே பெற வேண்டும்

## என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சேர்ந்து 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக அமுல்படுத்துவதாக இருந்தால் அதை செய்யட்டும். எமக்கான நிரந்தரத் தீர்வுகளை சர்வதேச ரீதியாகப் பெற நாம் நடவடிக்கை எடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் பேசும் மக்களின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது. காணிகள் பறிபோகின்றன. சிங்களக் குடியேற்றங்கள் அதிகமாகி வருகின்றன. வடகிழக்கின் தொடர்ச்சியானது இல்லாமல் செய்யப்பட்டு வருகின்றது. படையினர் பிரசன்னங்கள் கூடி வருகின்றன. சிங்கள அலுவலர்கள் அதிகளவில் இங்கு இருக்கும் திணைக்களங்களுக்கு வர ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ்.பல்கலைக்கழகம் பிற மாவட்ட மாணவ மாணவியர் அதிகமாகப் பயிலும் நிறுவனமாக மாறி வருகின்றது.

மொத்தத்தில் வடகிழக்கு மாகாண சனப்பரம்பல் மாறிக் கொண்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் சேர்ந்து தற்போது அரசியல் யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக அமுல்படுத்துவதாக இருந்தால் அதைச் செய்யட்டும். எமது நிரந்தரத் தீர்வுகளை சர்வதேச ரீதியாகப் பெற நாம் நடவடிக்கைகள் எடுப்போம்.

ஒற்றையாட்சியின் கீழான 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கும் எமது நிரந்தரத் தீர்வுக்கும் இடையில் சம்பந்தம் இல்லை.

அரசியல் வாதிகள் தேர்தலை ஒட்டியே தமது சிந்தனைகளை ஓடவிட்டுக் கொண்டிருப்பார்கள். தொடர்ந்து பதவியில் இருக்கவே அவர்கள் முழுமனதுடன் எத்தனிப்பார்கள். மக்களின் நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அவர்களுக்கு இரண்டாம் கட்டமே. அதுவும் மக்களின் நெருக்கடிகளைத் தீர்த்தால் தமக்கு தேர்தலில் என்ன நன்மை கிடைக்கும் என்றே பார்ப்பார்கள் என அவர் குறிப்பிட்டார். (நி-5-33)

## ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு 786 மில்லியன் அமெரிக்க டொலர்கள்

(கொழும்பு)

இலங்கையில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி வழங்க உள்ளது.

அத்தோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாடும் இலங்கையில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஆசிய அபிவிருத்தி வங்கியின் உப தலைவர் சிக்ஷின் ஷென் நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியினால், இலங்கைக்கு இவ்வாண்டில் 786 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அந்த வங்கியின் உதவியின் கீழ், இலங்கையில் தற்போது 27 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

### குருதிக்கொடையாளர்களுக்கு அழைப்பு

## ஒரு வாரத்திற்கு போதுமான குருதியே கையிருப்பில் உள்ளது

### யாழ்.போதனா இரத்த வங்கி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் எல்லா இரத்த வகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக இரத்த வங்கிப் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை இரத்த வங்கியால் நாளொன்றுக்கு 40 பைந்த் குருதி விநியோகிக்கப்படுகின்றது. தினமும் 40 பேர் இரத்த தானம் செய்தால் தான் இந்த விநியோகத்தைச் சீர்செய்ய முடியும். தற்போது இருப்பில் காணப்படும் குருதி இன்னும் ஒரு வாரத்திற்கு மட்டுமே போதுமானதாகும்.

குருதிக் கொடையாளர்கள் தொடர்ந்து இரத்ததானம் செய்யும் செயற்பாடு நடைபெற்றால் தான் தட்டுப்பாடு இல்லாது நோயாளர்களுக்குத் தேவையான குருதியை எம்மால் வழங்க முடியும். ஆகவே, இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

கொவிட்-19 தடுப்பூசி போட்டிருந்தால் ஒரு கிழமையின் பின்னரும், கொவிட் - 19 நோய் ஏற்பட்டிருந்தால் நோய் குணமடைந்து ஒரு மாதத்தின் பின்னரும் இரத்ததானம் செய்யலாம் எனவும் இரத்தவங்கிப் பிரிவு அறிவித்துள்ளது. இரத்த தானம் தொடர்பான தகவல்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-5-18)



வடக்கு மாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தனது பிறந்த தினமான நேற்றுக் காலை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். (படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந்)

## இலங்கை வந்தடைந்தார் ஹங்கேரிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

ஹங்கேரியின் வெளிவிவகார அமைச்சர் பீட்டர் சிஜா ர்டோ தலைமையிலான குழுவொன்று உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தது.

நேற்று அதிகாலை 4.40 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த தூதுக் குழுவினரை பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய வரவேற்றார்.



ஹங்கேரிய வெளியுறவு அமைச்சரின் ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது அவர் பல இருதரப்பு [illegible] ங்களில் ஈடுபடுவார் என எதிர் பார்க்கப்படுகிறது. (நி)

## தேர்தலை ஒத்தி வைக்கும் முடிவு அரசியல் உள்நோக்கம் கொண்டதா?

### பவ்ரல் அமைப்பு கேள்வி

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றைக் [illegible] அரசாங்கம் [illegible] பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குற்றம் சாட்டினார்.

கொரோனாத் தொற்றின் முதல் அலைக்கு மத்தியில் கூட பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றமையை சுட்டிக்காட்டிய அவர் இவ்வாறானதொரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சருக்கு உள்ள உரிமை மற்றும் அதிகாரத்தை பவ்ரல் அமைப்பு கேள்விக்குட்படுத்தவில்லை எனத்தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த நடவடிக்கையானது பொதுமக்களின் உரிமையைப் பறிக்கும் செயற்பாடு எனவும் தாமதத்திற்கு உண்மையான காரணம் நாட்டின் பொருளாதார மற்றும் கொரோனா வைரஸ் நிலைமையா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ் மோரிஸ் ஓய்வு



தென்னாபிரிக்க அணியின் சகல துறை வீரர் கிறிஸ் மோரிஸ் அனைத்து வகை யான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் உடனடியாக ஓய்வுபெறுவதாக அறிவித்து ள்ளார். அத்துடன் தென்னாபிரிக்காவின் உள்ளூர் அணியான டைட்டன்ஸின் பயிற்சியாளராக பொறுப்பேற்கவுள்ளதாகவும் மோரிஸ் ஓய்வு குறித்த அறிவிப்பில் தெரி வித்துள்ளார். மோரிஸ் அனைத்து வகை யான கிரிக்கெட் வடிவங்களிலும் 69 போட்டிகளில் தென்னாபிரிக்காவை பிரதி நிதித்துவப்படுத்தி விளையாடியுள்ளார்.

2021 இந்தியன் பிறீமியர் லீக்கில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக விளை யாடினார் மோரிஸ். தென்னாபிரிக்காவு க்காக நான்கு டெஸ்ட், 42 ஒருநாள் மற்றும் 23 இருபது-20 போட்டிகளில் விளையாடி யுள்ள அவர் இறுதியாக 2019 ஜூலையில் இங்கிலாந்தில் நடந்த ஒரு நாள் உலகக் கிண்ணத்தில் தென்னாபிரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தினார். (4)

# ஐ.பி.எல். போட்டிகள் மும்பையில் மட்டும்

15 ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக் கெட் போட்டி ஏப்ரல்-மே மாதங்களில் இந்தியாவில் நடத்த முடிவு செய்ய ப்பட்டுள்ளது. இந்த போட்டியில் லக்னோ, அகமதாபாத் ஆகிய புதிய அணிகள் பங்கேற்கின்றன. இத னால் இந்த சீசனில் மொத்தம் 10 அணிகள் விளையாடு கின்றன. ஐ.பி.எல்.

போட்டிக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் பெங்களூரில் நடைபெற வுள்ளது.

இதற்கிடையே நாடு முழுவதும் கொரோனா பரவல் அதிகரித்து வரு கிறது. இதனால் ஐ.பி.எல். போட் டிகளை ஒரே இடத்தில் நட த்த கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டு உள்ளது. வீரர்களின் பாது காப்பு கருதி 2 ஆவது திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் காலகட்ட த்தில் கொரோனா நிலையைக் கருத்தில் கொண்டு 2 ஆவது திட்டம் செயற்படுத்தப்படும்.

இதன்படி அனைத்து ஐ.பி.எல். ஆட்டங்களையும் மராட்டிய மாநிலம் மும்பையில் நடத்த கிரிக்கெட் வாரியம் முடிவு செய்து உள் ளது. அங்குள்ள வான்கடே மைதானம், பிரபோர்ன் ஸ்டேடியம், நவீன் மும் பையில் உள்ள டி.வை. பட்டீல் ஸ்டேடியம் ஆகிய 3 மைதானங்க ளில் நடத்த திட்டமிடப்பட்டு உள் ளது.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டி ஏப்ரல் 12 ஆம் திகதி தொட ங்கலாம் என்று எதிர்பார்க்கப்படு கிறது. (4-6)




## ஐ.பீ.எல். 2022 ஸ்பொன்ஸர் உரிமத்தை பெற்றது டாடா




இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரின் டைட்டில் ஸ்பொன்சர் உரிமத்தை இந்தியாவின் பிரபல தொழில் குழுமமான டாடா கைப்பற்றியுள்ளது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் ஐ.பி.எல். தொடருக்கு உல கம் முழுவதும் ரசிகர்கள் உள்ளனர். இதையடுத்து அதன் டைட்டில் ஸ்பொன்சர் உரிமத்தை பெறுவதற்கும் நிறுவனங் களிடையே கடும் போட்டி நடைபெ றும்.

ஐ.பி.எல்.தொடங்கிய போது டி.எல்.எஃப், பெப்சி ஆகிய நிறுவனங்கள் டைட்டில் ஸ்பொன்சராக இருந்தன. இதன்பின் 2016 இல் இருந்து சீனாவை சேர்ந்த விவோ நிறுவனம் ஐ.பி.எல்லின் டைட்டில் ஸ்பொன்சராக இருந்து வந்தது.

இதற்காக அந்த நிறுவனம் ஆண்டு க்கு ரூ.440 கோடி பிசிசிஐ-க்கு செலுத்தி வந்தது.

இந்நிலையில் தற்போது 2022 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். போட்டியின் புதிய டைட்டில் ஸ்பொன்சராக டாடா நிறுவனம் தேர்வாகியுள்ளது. இதனை ஐ.பி.எல். சேர்மன் பிரிஜேஷ் படேல் உறுதி செய்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை பலம் கொண்ட எம்மை எதிர்க்கட்சியால் அசைக்க முடியாது

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

"நாட்டில் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும்" என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் சமகால நிலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாடு தற்போது சகல வழிகளிலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்குக் கொரோனாப் பெருந்தொற்றே காரணம். இதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

ஆனால், எதிரணியினர் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கின்றனர்.

அவர்கள்நாடடெங்கும்சென்று அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

எதிரணியினரின் இந்தப் பொய்ப் பிரசாரங்களை எமக்கு ஆணை வழங்கிய மக்கள் நம்பவே மாட்டார்கள்.

ஏனெனில், அவர்களுக்கு உண்மை நிலவரம் தெரியும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் படுதோல்வியைச் சந்தித்தது.

இந்தக் கட்சியால் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கொண்ட எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது.

இவ்வருடத்தில் நாடு முன்னோக்கிச் செல்லும் வேலைத் திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம்.

அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும்" எனத் தெரிவித்தார். (நி-5)

# பாராளுமன்றுக்கு வரும் ஊடகவியலாளர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

(கொழும்பு)

பாராளுமன்றுக்கு வருகை தரவுள்ள ஊடகவியலாளர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் போது பாராளுமன்றுக்கு வருகை தரும் ஊடகவியலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றை கண்டறியும் உடனடி அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அன்றைய தினம் காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரை இவ்வாறு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# எரிவாயு மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்களுக்கு தரச்சான்றிதழ்

(கொழும்பு)

திரவ பெற்றோலிய எரிவாயு, சிலிண்டர் வால்வுகள், ரெகுலேட்டர்கள் உள்ளிட்ட பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை தர நிர்ணய நிறுவனத்திற்கு (SLSI) அதிகாரம் அளிக்கும் விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, திரவ பெற்றோலிய எரிவாயு மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களுக்குப் பரிசோதனைகளின் பின்னர் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தினால் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.

இலங்கையில் கடந்த ஒரு மாத காலமாக எரிவாயு கொள்கலன்களில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவங்களை அடுத்து நீதிமன்றத்தில் எரிவாயு நிறுவனங்கள் இணங்கிக் கொண்டமைக்கு அமையவே இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
### 127/3, ஆஸ்பத்திரி வீதி, வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட் டாரம் 05 ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இல:127/3 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் முருகன் கைம்பெண் செல்வம் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை வேலன் முருகன் பெண் சின்னாச்சி என்பவர் பிரசித்த நொத்தாரிசு மு.க.சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3733/21.11.1919 ம் இலக்க உறுதியால் முருகன் வேலனும், ஐயன் கணபதியும் பெண் குஞ்சியும், முருகன் சின்னத்தம்பியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனம் வேலாயுதம் மனோரஞ்சனும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் தங்களில் 2ம் பேரின் பூட்டியான குறித்த வேலன் முருகன் பெண் சின்னாச்சிக்கு குறித்த ஆதனம் சொந்தமாக இருந்தது என்றும், குறித்த வேலன் முருகன் பெண் சின்னாச்சிக்கு பிள்ளைகள் இல்லையென்றும் பெறாமகள் சின்னத்தம்பி மாணிக்கம் பெண் அன்னம்மாவுக்கு குறித்த ஆதனத்தை வழங்கியிருந்தார் என்றும் அவர் குறித்த 2 ம் பேரின் தாயாரான கந்தப்பு முருகேசு பெண் சரஸ்வதிக்கு குறித்த ஆதனத்தினை வழங்கியிருந்தார் என்றும் குறித்த கந்தப்பு முருகேசு பெண் சரஸ்வதி குறித்த 2ம் பேருக்கு 1991 ஆம் ஆண்டு சீதன ஆதனமாக வழங்கியிருந்தார் என்றும், இற்றை நாள் வரையில் எவ்வித இடையூறுமின்றி ஆட்சி செய்யப்பட்டு வரப்படுகிறது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 7701/02.02.2006ம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள்.

குறித்த ஆதனத்தை சுப்பிரமணியம் தினேஸ் ஆகியவரிற்கு பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8597/21.05.2007ம் இலக்க உறுதியால் குறித்த வேலாயுதம் மனோரஞ்சனும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் தவணை அறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

வேலாயுதம் மனோரஞ்சனும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 12588/01.03.2011ம் இலக்க உறுதியால் குறித்த சுப்பிரமணியம் தினேஸ் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று மீளவும் சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

கந்தசாமி றமேஸ்குமார் பெண் பவ்யா ஆகியவர் பிரசித்த நொத்தரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 14053/15.07.2012ம் இலக்க உறுதியால் குறித்த வேலாயுதம் மனோரஞ்சனும் பெண் ஞானாம்பிகையும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

கந்தசாமி றமேஸ்குமார் பெண் பவ்யா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி றமேஸ்குமார் பெண் பவ்யா ஆகியவரிற்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

(9628)


# இராசிபலன்

13.01.2022
மார்கழி 29, வியாழக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.01 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 7.34 மணிவரை
சுபநேரம் 8.03-9.33 மணிவரை
இராகுகாலம் 2.03-3.33 மணிவரை
சந்திராஷ்டமம்: சித்திரை, சுவாதி
சுவர்க்க வாயிலேகாதசி விரதம்,
கார்த்திகை விரதம்.

வளவன்

**மேஷம்**: சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**: சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**கடகம்**: வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**சிம்மம்**: மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி**: வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர்.

**துலாம்**: சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.

**விருச்சிகம்**: விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**தனுசு**: புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு.

**மகரம்**: வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்**: வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**: பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

உன் அறிவுதான் உன் வாழ்க்கைக் கப்பலின் நங்கூரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வேலைவாய்ப்பு இல்லா பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்திடம் யாழ். மறை மாவட்ட ஆயர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் இளைஞர்-யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு இல்லாப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என யாழ்.மறைமாவட்ட ஆயர் எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசத்தை யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ். மறைமாவட்ட ஆயர், நான் மூன்று விடயங்களை குறிப்பாக குறிப்பிட்டேன். அதாவது கல்வி, மீன்பிடி, விவசாயம். இந்த மூன்று துறைகளையும் வடக்கில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

அத்தோடு இந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாப் பிரச்சினை ஒரு பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-5-33)

# தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு 'நேர்மைக்கு மகுடம்' விருது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு "நேர்மைக்கு மகுடம்" விருது வழங்கப்பட்டுள்ளது.

ஊழல் மற்றும் இலஞ்சமற்ற ஒரு சிறந்த ஆளுமை மிக்க அரச சேவையாளருக்காக குறித்த விருது தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ச. சிவஸ்ரீக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த விருது வழங்கும் நிகழ்விலேயே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் நேர்மையான அரச அலுவலர்களை கௌரவித்து பாராட்டி நேர்மைக்கு மகுடம் விருதுகளை வருடாந்தம் வழங்கி வருகின்றது. அந்தவகையில் இம்முறையும் அகில இலங்கை ரீதியில் 10 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-18-33)



# பரு. பிரதேச செயலகப் பிரிவில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சும் அதன் திணைக்களங்களும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை யாழ். மாவட்டத்தில் விரைவில் இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் இந்நடமாடும் சேவையில் பயன்பெற எதிர்பார்க்கும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் தாங்கள் 'எதிர்பார்க்கும் சேவை தொடர்பாக தமது பிரிவு கிராம உத்தியோகத்தருடன் நாளை மறுதினம் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார்.

குறித்த நடமாடும் சேவையில் பங்குபற்றவுள்ள திணைக்களங்களாவன,

நீதி அமைச்சின் தொழிலாளர் தீர்ப்பாயம், சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணை சத்தியப்பிரமாணத்திற்கான ஆணையாளர், அகில இலங்கை மொழிபெயர்ப்பாளர் தொடர்பான சேவைகள், சிறைச்சாலைச் சீர்திருத்தம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்விற்கான இராஜாங்க அமைச்சு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், சட்ட உதவி ஆணைக்குழு, இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம், குற்றம் மற்றும் சாட்சியங்களினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான அதிகார சபை, ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், கடன் இணக்க சபைத் திணைக்களம், சமுதாயம்சார் சீர்திருத்தங்கள் திணைக்களம், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம், மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம், மத்தியஸ்த சபை, சிறைச்சாலைத் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு, தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியவற்றின் சேவைகள் இடம்பெறவுள்ளன. (4)

# யாழில் எகிறியது தங்கத்தின் விலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை தங்கத்தின் விலை பவுண் ஒன்று ஆயிரத்து 500 ரூபாயினால் அதிகரித்துள்ளது.

இலங்கையில் டொலருக்கான தட்டுப்பாடு உள்ளதனால் தங்க இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால் அதன் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது.

ஆபரணத் தங்கத்தின் விலை யாழ்ப்பாணத்தில் ஒரு பவுண் 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 200 ரூபாயாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் அதன் விலை ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 850 ரூபாயாகக் காணப்பட்டது.

தூய தங்கத்தின் விலை 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாயாக அதிகரித்துள்ளது. (4-5-33)

# பொங்கல் விழாவும் திருமுறை ஓதல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு சிறப்பு பொங்கல் விழாவும் அதனைத் தொடர்ந்து மாலை 4 மணி தொடக்கம் ஆலய மண்டபத்தில் திருமுறை ஓதும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4-6)

# 'மாநகர சபை அன்புடன் வரவேற்கிறது' பெயர்ப் பலகை திறந்து வைப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரத்தினை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பலாலி பிரதான வீதியில் யாழ்ப்பாண மாநகரசபை அன்புடன் வரவேற்கின்றது என்னும் பெயர்ப்பலகை அமைக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் குறித்த வரவேற்புப் பலகை அமைக்கப்பட்டுள்ளதோடு மாநகர சபையில் இலட்சனையும் பொறிக்கப்பட்டுள்ளது. (4-33)

# விநாயகர் பூஜை

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காலை 8 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறும் என ஆலய பிரதம குரு அறிவித்துள்ளார். (4-6)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுவர்க்கவாயில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் "தெய்வத் தமிழ்ச்சுடர்" இராசையா ஸ்ரீதரனின் "ஆழ்வார்களும் மாயவனும்" என்ற பொருளில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (4)

# தெய்வீக கிராமிய நிகழ்வு

(வவுனியா)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியா பிரதேச செயலகம் நடத்தும் பழனி முருகனின் தெய்வீக கிராமிய நிகழ்வு-2022 எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு அபிராமி உபாசகி ஆன்மிக நிலையம், பழனிமுருகன் அறநெறிப் பாடசாலையில் பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-5)

# சனசமூக நிலையங்களில் பெண்கள் கட்டாயம்

## நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்கள் மற்றும் கோவில் நிர்வாகங்களில் பெண்களை இணைத்துக் கொள்வதனை கட்டாயமாக்க வேண்டும் என நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் 46 ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன்போது சபை உறுப்பினர் சி.கௌசலா, "சனசமூக நிலையங்கள் மற்றும் கோவில் நிர்வாகங்களில் பெண்களை இணைத்துக் கொள்வதனை கட்டாயமாக்க வேண்டும்" என சபையில் பிரேரணையை முன்வைத்தார்.

அதனை சபை உறுப்பினர்கள் ஆதரித்ததை அடுத்து சபையில் அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோற்றுப் போன அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்

## யாழில் எதிர்க்கட்சித் தலைவர்

(யாழ்ப்பாணம்)

**ஒரு துண்டு நிலத்தையேனும் வேறு நாட்டிற்கு கொடுக்காத புதிய அரசை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்தார்.**

நேற்று யாழ்ப்பாணம் - நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு நாட்டின் அரசானது மக்களின் அத்தியாவசியமான தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாக செயற்பட வேண்டும். வெளிநாட்டில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்து மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க முடியாமல் இந்த அரசு திண்டாடுகிறது. தேர்தல் காலத்தில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது. ஆனால் தற்பொழுது மக்கள் வாழ முடியாதுள்ளார்கள்.

குறிப்பாக உணவு, பானங்களை நாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை, குழந்தைகள், தாய்மாருக்கான பால்மா மற்றும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இந்த கோட்டாபய அரசு காணப்படுகிறது.

வீரதீரமான அரசு, புத்திசாலித்தனமான அரசு என கூறிய அரசாங்கம் பலமில்லாத அரசாங்கமாக மாறியுள்ளது.

எனவே ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக ஒரு பலமான அரசினை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும். குறிப்பாக நமது ஆட்சியில் இனவாதம், மதவாதம் மற்றும் ஒரு துண்டு நிலம் கூட வேறு நாட்டுக்கு கொடுக்காத சிறந்த ஒரு நாட்டினை உருவாக்குவதற்கு நாங்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-33)

# இலங்கை பொலிஸாருக்கு ஹிந்தி மொழிப்பயிற்சி

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸாருக்கு ஹிந்தி மொழி கற்பிக்கப்படுகிறது என இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

2022 ஜனவரி 10ஆம் திகதியன்று, இலங்கையின் பொலிஸாருக்கு ஹிந்தி புலமைக் கற்கையை ஆரம்பித்துள்ளதாக உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான ஆரம்ப நிகழ்வில் இலங்கையின் 70 இற்கும் மேற்பட்ட பொலிஸ் சிரேஷ்ட அதிகாரிகளும், அலுவலர்களும் பங்கேற்றனர். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவை பலப்படுத் தும் முகமாக இந்த பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் தற்போது 10 பல்கலைக்கழகங்களிலும் 80 அரச பாடசாலைகளிலும் ஹிந்தி கற்பிக்கப்படுவதாக இந்த நிகழ்வின் போது, இந்திய உதவி உயர்ஸ்தானிகர் வினோட் கே ஜேக்கப் தெரிவித்தார். (நி-5)




மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி. லலிதா சற்குணராசா

(உதவி அதிபர்)

எமது பாடசாலையில் பன்னிரெண்டு ஆண்டுகள் சேவையாற்றி 14.01.2022 அன்று ஓய்வு பெறும் எமது ஆசானைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம், யா/ செட்டித்தெரு மெ.மி. த. க. பாடசாலை

(C-3512)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:கேட்டை<br>கி.பா:சூரி 6 செவ் 12இல்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: B.Sc, Coordinator (தனியார்)<br>எதிர்பார்ப்பு:சாதாரண குடும்பப்பெண்<br>தொ.இ: B/6353 | பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா:15 சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்:165 cm<br>தகைமை/தொழில்:முகாமைத்துவம் வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு:அவுஸ்திரேலியா, லண்டன்<br>தொ.இ:G/6079 |
| பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 53 ½ சூரி, செவ் 71 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Development officer<br>எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்<br>தொ.இ: B/6407 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா:-57 சூரி 11 செவ் 10இல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தனியார் தொழில் அல்லது சொந்தத் தொழில்<br>தொ.இ:G/6035 |
| பிறப்பு:1984 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம் 3<br>கி.பா:-43 ¾ செவ் 7 சூரி, 4 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: A/L மின் இணைப்பாளர் அலுமினியம்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6416 | பிறப்பு:1990 இந்து நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: சூரி 3 செவ் 10<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர்பதவி<br>தொ.இ:G/6106 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: சூரி 12 செவ் 10இல்<br>உயரம்:157cm<br>தகைமை/தொழில்:O/L கடை(சொந்தம்)<br>தொ.இ: B/6434 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்:அத்தம் 2<br>கி.பா: சூரி 5 செவ் 10<br>உயரம்:168 cm<br>தகைமை/தொழில்:கல்வியியற் கல்லூரியில் கற்றுக்கொண்டிருக்கிறார்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு அல்லது அரச தொழில்<br>தொ.இ:G/6110 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைபேசி
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# நல்லூர் பிரதேச சபை ஒரு வழிப்பாதை பற்றிய பகிரங்க அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பான ஆடியபாதம் வீதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் முகமாக 2022.01.13 வியாழக்கிழமை இன்று காலை 5.00 மணிமுதல் இரவு 8.00 வரை ஆடியபாதம் வீதியில் அரசடி அம்மன் கோவில் சந்தியில் இருந்து திருநெல்வேலி சந்தி நோக்கிய பயணம் அம்மன் வீதி மற்றும் கலாசாலை வீதிக்கு திசை திருப்பப்பட்டு திருநெல்வேலி சந்தியில் இருந்து கல்வியங்காட்டுச் சந்தி நோக்கிய பயணத்திற்கு மட்டும் ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

ப.மயூரன்,
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை,
2022.01.13 (C-3513)


60 வது அகவையில் பிறந்த நாளும் சேவை நயப்பும்



யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலையில் 7 வருடங்கள் ஆரம்பக் கல்வி ஆசிரியராக அளப்பரிய சேவையாற்றி 13.01.2022 அகவை அறுபதில் ஓய்வு பெறும்

திரு. செல்லையா சிவலிங்கராஜா SLTS-I

அவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | - 20.03.1990-28.02.1996 |
| யா/ மாமுனை அ.மி.த.க.பா | - 01.03.1996-31.12.1996 |
| யா/ நாகர்கோவில் அ.மி.த.க.பா | - 01.01.1997-31.12.1999 |
| யா/ இமையாணன் அ.த.க.பா | - 01.01.2000-31.12.2006 |
| யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி | - 01.01.2007-10.02.2015 |
| யா/ கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா | - 11.02.2015-13.01.2022 |

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம், கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பாடசாலை

(C-3515)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஏவுகணையை பரிசோதித்தது வடகொரியா



(பியாங்யாங்)

கிம் ஜாங் உன் மேற்பார்வையில் வடகொரியா நேற்று முன்தினம் மீண்டும், கண்டம் விட்டு கண்டம் பாயும் அணு ஏவுகணையை பரிசோதித்துள்ளது.

இது வட கொரியாவின் மூன்றாவது ஹைப்பர்சோனிக் ஏவுகணைச் சோதனை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜகாங் மாகாணத்தில் நடத்தப்பட்ட இந்த ஏவுகணை சோதனையின் போது ஏவுகணை 700 கிலோமீற்றர் வரை சென்று கடலில் விழுந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடகொரியா கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில் இதனைக் கண்டித்து அமெரிக்கா உட்பட ஆறு நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மருத்துவச் செலவை அவரவர் ஏற்க வேண்டும்

## தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு கனடா அதிரடி அறிவிப்பு

(ஒட்டாவா)

கொரோனா தடுப்பூசி போடாதவர்களுக்கு மருத்துவ வரி விதிக்க கனடாவின் கியூபெக் மாகாண அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் நோய் வாய்ப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டால் சிகிச்சைக்கான கட்டணங்களை அவர்களே செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

கனடாவிலேயே அதிகமான கொரோனா மரணங்கள் கியூபெக் மாகாணத்தில் பதிவாகியுள்ளன. அத்துடன், ஒமிக்ரோன் திரிபு பரவல் தற்போது அங்கு தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் மாகாணத்தில் 12.8 வீதம் பேர் இதுவரை தடுப்பூசி போடவில்லை. கொரோனாவால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு தற்போது சிகிச்சை பெற்று வருபவர்களில் 50 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்களாக உள்ளனர்.

இவ்வாறான நிலையிலேயே தடுப்பூசி போடாதவர்களுக்கு மருத்துவ வரி விதிக்க கியூபெக் மாகாண அரசு முடிவு செய்துள்ளதாக மாகாண முதல்வர் பிராங்கோயிஸ் லெகால்ட் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (நி-5)

# கறுப்பினப் பெண் உருவம் பொறிக்கப்பட்ட நாணயம்

## வெளியிட்டது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்க வரலாற்றில் முதல்முறையாக கறுப்பினப் பெண் உருவம் பொறிக்கப்பட்ட நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரபல எழுத்தாளரும் பெண்ணிய ஆர்வலருமான மாயா ஏஞ்சலோ தனது சுயசரிதையால் பிரபலமானவர்.

அமெரிக்காவில் கணிசமான சர்ச்சையை ஏற்படுத்திய அந்தப் புத்தகத்தில், சிறுவய தில் தான் அனுபவித்த துஷ் பிரயோகம் மற்றும் அதன் தாக்கம் குறித்து விரிவாக எழுதியிருந்தார்.




அவர் 2014 இல் தனது 86 ஆவது வயதில் உயிரிழந்தார்.

இதற்கிடையில், மாயா ஏஞ்சலோவின் நினைவாக தற்போது நாணயங்கள் வெளியிடப்படுகின்றன. (நி)

# பொருளாதார மீட்சியை ஒமிக்ரோன் தடுக்கும்

## உலக வங்கி எச்சரிக்கை

(ஜெனிவா)

**கொரோனாத் தொற்று மாறுபாடு உலகளாவிய பொருளாதார மீட்சியைத் தடுக்கும் என்று உலக வங்கியும் எச்சரித்துள்ளது.**

ஒமிக்ரோன் பரவல் காரணமாக 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி குறையும் என்றும் தொழிலாளர் வெற்றிடங்கள் மற்றும் விநியோகச் சங்கிலி சீர்குலைவுகள் அதிகரிக்கும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது. ஐரோப்பாவில் வசிக்கும் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் ஒமிக்ரோனால் பாதிக்கப்படுவர் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

# ஒமிக்ரோன் பாதிப்பு அனைவருக்கும் ஏற்படும்

## இந்திய தலைமை மருத்துவ நிபுணர்

(டில்லி)

ஒவ்வொருவருக்கும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்படும் என்றும், 80 சதவீதமானோருக்கு பாதிப்பு தெரியாது என்றும் இந்திய தலைமை மருத்துவ நிபுணர் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் வைரஸ் இந்தியாவில் மிக வேகமாக பரவி வருகிறது. ஒமிக்ரோனால் இந்தியாவில் 3ஆவது அலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஒவ்வொருவருக்கும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்படும் என்றும், 80 சதவீதம் பேருக்கு பாதிப்பு தெரியாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒமிக்ரோனால் ஏற்படும் பாதிப்பால் அச்சப்படத் தேவையில்லை. ஏனென்றால் புதிய திரிபு லேசானது. டெல்டாவுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் மிக வேகமாக பரவினாலும், பாதிப்பை ஏற்படுத்தாது.

உலகம் முழுவதும் இந்த நோய் தொற்று ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5)

# இந்தியாவில் ஒருநாள் தொற்றாளர் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை நெருங்கியது

(டில்லி)

இந்தியாவில் ஒருநாள் கொரோனா தொற்று நோயாளர் தொகை 2 இலட்சத்தை நெருங்கியுள்ளது.

நேற்றுக் காலை 9 மணி வரையான கடந்த 24 மணி நேரங்களில் இந்தியாவில் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 720 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், நேற்று முன்தினம் 442 பேர் உயிரிழந்தனர் என இந்திய மத்திய சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள தொற்று நோய் நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரு இலட்சத்து 68 ஆயிரம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்று இந்த எண்ணிக்கை 2 இலட்சத்தை நெருங்கியுள்ளது.

தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில் தற்போது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகள் மற்றும் வீடுகளில் 9 இலட்சத்து 55 ஆயிரத்து 319 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 4 ஆயிரத்து 868 ஆக அதிகரித்துள்ளது. (நி-5)

# ஆப்கானிஸ்தானுக்கு 308 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவியை வழங்குகிறது அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு மனிதாபிமான உதவியாக மேலும் 308 மில்லியன் டொலர்களையும் கொரோனா தடுப்பூசிகளையும் வழங்க திட்டமிடுவதாக தேசிய பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க துருப்புக்கள் வெளியேறியதை அடுத்து நாடு மோசமான மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில் இதற்கான நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஜோ பிடன் அரசாங்கம் அழுத்தத்தை எதிர்கொண்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவரகத்தின் இந்த நிதியானது, சுயாதீன மனிதாபிமான நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்குமிடங்கள், சுகாதார சேவைகள், குளிர்கால உதவிகள், அவசர உணவு மற்றும் குடிநீர் உதவிகள் உள்ளிட்ட சேவைகளுக்காக இந்த நிதியுதவி வழங்கப்படும் என தேசிய பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

மேலும் உலகளாவிய தடுப்பூசி பகிர்வு திட்டமான கோவ்கஸ் மூலம் மேலதிகமாக ஒரு மில்லியன் கொரோனாத் தடுப்பூசிகளையும் அமெரிக்கா வழங்கும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 2021 முதல் புதிய உதவி உட்பட நாட்டிற்கு 782 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவியை அமெரிக்கா வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் பொதுமக்கள் பொருட்கொள்வனவில் ஆர்வம்



(யாழ்ப்பாணம்)

இந்துக்களால் கொண்டாடப்படும் தைப்பொய்கல் நாளை 14 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பொங்கல் பானைகளையும், பொங்கலுக்கு தேவையான இதர பொருட்களைக் கொள்வனவு செய்வதை காண முடிந்தது. குறிப்பாக யாழ்.மாநகர சபை க்குள் உள்ளிட்ட அங்காடி, நகர கடைத்தொகுதிகள் மற்றும் திருநெல்வேலி மத்திய மரக்கறி கடைத்தொகுதிகளிலும் பொங்கல் பானைகள், பொங்கலுக்கு தேவையான இதர பொருட்கள் கொள்வனவு செய்துவருகின்றனர். (4-5-33)

# புதிய திரிபுகள் தொடர்பில் அவதானம் தேவை

## பணிப்பாளர் ராகுலன் தெரிவிப்பு



(நெளுக்குளம்)

கொரோனாவின் புதிய தொற்றுக்கள் தொடர்பில் மக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் என வவுனியா பொது மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவ கலாநிதி க. ராகுலன் தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று நோயின் தாக்கம் சுகாதார திணைக்களத்தின் கட்டுக்குள் இருக்கின்ற போதிலும் அது முற்று முழுதாக அபாய நிலைக்குள் அல்ல என்று நாங்கள் கருதிவிட முடியாது. புதிய திரிபுகள் மக்களிடம் பரவி வருகின்றன.

எனவே பொதுமக்கள் பாதுகாப்பாகவும், அவதானமாகவும், பாதுகாப்பு நடைமுறைகளை தொடர்ந்தும் பேணி அவதானமாக செயற்பட வேண்டும். இதன் காரணமாகவே மருத்துவமனைக்கு பார்வையாளர்களாக வருபவர்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (4-5-299)

# சான்றுப்பொருட்களை பெற்றுக் கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் வழக்கு இல AR/ 13 /2022 ஐ உடைய NP BFL - 3205 இலக்கத் தகடுடைய மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ளவும்.

அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து 2 மாதங்களின் பின் முன் அறிவித்தல் ஏதுமின்றி பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# மன்னார் பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசமானது

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளராக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எம்.ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு கடந்த 2 தடவைகள் தோற்கடிக்கப்பட்டது. இரண்டு தடவைகள் பாதீடு தோற்கடிக்கப்பட்ட நிலையில், புதிய தவிசாளர் தெரிவு நேற்று புதன் கிழமை மன்னார் பிரதேச சபையில் வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது புதிய தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் எம்.ஐ.எம். இஸ்ஸதீன் தெரிவு செய்யப்பட்டார். (4-5-285)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி ஆனந்தபுரம் ஜெய துர்க்கை அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ அமிர்த இலட்சுமிகாந்தக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# 15 அடி நீள மலைப்பாம்பு மீசாலையில் பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

மீசாலை அல்லாரை கிராமத்தில் 15 அடி நீளமான மலைப்பாம்பு ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை அல்லாரை பகுதியில் உள்ள வீட்டில் சேவல் ஒன்றை மலைப்பாம்பு பிடித்துள்ளது. சேவல் கத்தும் சத்தத்தினை கேட்ட வீட்டிலிருந்தவர்கள் சென்று பார்த்த போது மலைப்பாம்பு சேவலை விழுங்க முற்பட்டுள்ளது.

இதையடுத்து வீட்டில் இருந்தவர்களின் முயற்சியால் பாம்பு பிடித்துக் கட்டப்பட்டது. கிராமத்துக்குள் மலைப்பாம்பு புகுந்த சம்பவம் கிராம மக்க



ளிடையே பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (4-5-18-33)



சுன்னாகம் SDB வங்கியில் சிறுவர் கணக்கை பேணும் மாணவர்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான மகுடம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

# தனிநபர்கள் பிரச்சினையால் ஆலய வழிபாடு நிறுத்தம்

## பிரதேச செயலகத்தில் முறைப்பாடு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாங்குளத்தில் ஆலயம் ஒன்றில் பூஜை இடம்பெறாது தடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாங்குளம் இத்திமரத்தடி சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 9 ஆம் திகதி முதல் பூஜைகள் இடம்பெறவில்லை.


தனிநபர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக ஆலயப் பூஜைகள் நிறுத்தப்பட்டு பூஜை செய்து வந்த ஆலய குருக்களும் ஆலயத்தில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டது.

பொதுமக்களின் வழிபாட்டுத் தலத்தினை சிலரின் தனிப்பட்ட பிரச்சினைகளுக்காக பூஜைகள், விழாக்கள் இடம் பெறாமல் தடுக்கப்படுவது நியாயமற்றது.

இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-350)

# மன்னாரில் 5 வாகனங்களை மோதித்தள்ளியது பேருந்து

## சாரதி தப்பி ஓட்டம்



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பிரதான வீதி ஸ்ரேடியம் சந்தி பகுதியில் பாரிய விபத்து சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஸ்ரேடியம் சந்திப் பகுதியில் சமிக்ஞைக்காக காத்திருந்த 5 இற்கும் மேற்பட்ட வாகனங்களை ஆஸ்பத்திரி வீதியூடாக ஸ்ரேடியம் நோக்கிப் பயணித்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதித்தள்ளியது. குறித்த விபத்தில் முச்சக்கர வண்டி ஒன்று முற்றுமுழுதாக சேதமடைந்ததுடன் ஏனைய வாகன சாரதிகள் சிறிய காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் விபத்தை ஏற்படுத்திய சாரதி அருகில் இருந்த வீதி ஒன்றில் பேருந்தை நிறுத்தி விட்டு தப்பித்து சென்றுள்ளார். இதனை தொடர்ந்து மன்னார் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனப் பேராசான் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா

## மறைந்தார் மாண்பு

**இன்று கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவின் நூறாவது பிறந்த தினமாகும்**



யாழ்ப்பாணத்தின் இணுவிற்பதியில் "கலையரசர்" ஏரம்பு, தங்கமுத்து தம்பதியர் 13.01.1922 இல் பெற்றெடுத்த கலைக் குழந்தை சுப்பையா தனது தந்தை ஏரம்புவிடம் இசை, நடனம் கற்க ஆரம்பித்தார். இக்காலத்தில் பெண்கள் மேடையில் நடிக்கவோ, ஆடல் அளிக்கை செய்யவோ சமூகம் அனுமதிக்காததால் சுப்பையா தானே பெண் வேடம் பூண்டு மேடைகளில் நடித்தும், ஆடல் அளிக்கைகள் செய்தும் வந்தார்.

1940 ஆம் ஆண்டு தன்னுள் இருந்த கலையை வளர்க்க விழைந்து சுப்பையா தமிழ் நாட்டிற்குச் சென்றார். அங்கு இராமகான சபையினர் இவரது திறமையைக் கண்டு தம் நாடகக் குழுவில் இணைத்துக் கொண்டனர். சுப்பையா இந்தியாவில் திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் பரத நடனக் கலை நுட்பங்களையும், 1946 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரை குரு கோபிநாதிடம் கதகளி ஆடலையும், கிராமிய நடனங்களையும் கற்றுக் கொண்டார்.

இதன்போது ஜெமினியின் தயாரிப்பில் உருவான சந்திரலேகா, சக்ரதாரி படங்களில் சுப்பையாவினது ஆற்றுகைகள் இடம்பெற்றன.

வி.ஆர்.இராசநாயகம் ஆரம்பித்த யாழ்ப்பாண நடனக் கல்லூரியில் இவர் நடன ஆசிரியராகப் பணி புரிந்தார். 1949 இல் கொக்குவில் கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியின் புதல்வி பூரணம் என்பவரை வாழ்க்கைத் துணையாக்க அவர் தன் கணவரின் கலைப் பயணத்திற்கு இறுதிவரை பக்க பலமாயிருந்து வந்துள்ளார்.

எஸ்.பரம், கலையரசு கே.சொர்ணலிங்கம், ஏ.பி. நடராஜா, குமாரசுவாமி, தம்பிரத்தினம், கலைப்புலவர் நவரத்தினம், மகேஸ்வரி நவரத்தினம் முதலானோர் இவரது நடனக் கலைக்கான பணியை முன்னெடுக்க உதவினர். இக்காலத்தில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான நடனப் போட்டிகள் இக்கலைஞரின் ஆக்கத்திறனை: சிந்தனை வீச்சைத் தூண்டிவிட்டன.

1952 ஆம் ஆண்டு நடன ஆசிரியராக நியமனம் பெற்று, நெடுந்தீவு மகாவித்தியாலயம், இராமநாதன் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை, கனகரத்தினம் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இவர் தனது பரத நடனக் கற்பித்தலைத் தொடர்ந்து, சாதனைகள் பல படைக்க அவற்றைக் களமாக்கினார்.

1956 ஆம் ஆண்டு கொக்குவிலில் "கலாபவனம்" என்ற கலைக்கூடத்தினை ஆரம்பித்தார். இவர் பயிற்றுவித்த அரிவு வெட்டு நடனம், செம்பு, வாள் நடனங்கள் நடனப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன. 1956 ஆம் ஆண்டு கே.ஆழ்வாப்பிள்ளை இவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தார்.

1959 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற உலக விவசாயப் பொருட்காட்சி விழாவில் ஆந்திர கிராமிய நடனக் குழுவினருடன் இவர் நடனமாடினார். பொதுப் பணிகளுக்கு நிதி சேகரிக்கும் முகமாகக் கலை நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார்.

சதீஅகல்யா, சுகன்யா, பாமா, விஜயம், ஊர்வசி, குறிஞ்சிக்குமரன், தம்பியர் மூவர், திருவெம்பாவை, பஸ்மாசுர மோகினி, காணி நிலம், காமதகனம், யேசு பிறந்தது, சூடாமணி, பாரிஜாதம் ஆகிய நாட்டிய நாடகங்கள் கலைச்செல்வனின் திறனை ஊரறியச் செய்தன. கலையின் உயர்ந்த விழுமியங்களை அழுத்தி, ஆடல் ஆக்கங்களின் போது பரத நடன மரபுகளின் மூலங்கள் வழுவின்றிப் பின்பற்றப்பட வேண்டுமென்பதில் உறுதியாயிருந்தார்.

இவர் மிக நுட்பமான, கலையழகு நிரம்பிய ஜதிகளைத் தனது பரத ஆற்றுகைகளில் வெளிப்படுத்தினார். கிராமிய நடனங்கள், செவ்வியல் முறையான பரதநாட்டியம் என்ற இரு ஆடல்களின் குறியீடுகளைத் தமது அழகியற் செயற்பாடுகளில் அமைத்தவர் அமரர். ஏரம்பு சுப்பையா என்று பேராசிரியர் கலாநிதி.சபா.ஜெயராசா குறிப்பிட்டுள்ளார்.

1956 ஆம் ஆண்டு குரு கோபிநாத்,"கதகளி, பரத நாட்டியம், பிற கிராமிய நடனங்கள் பற்றிய செய்முறை, சாஸ்திரம் அறிந்து சுப்பையா செயற்படுவது கண்டு மகிழ்ச்சி" என்று வாழ்த்தினார். 1960 இல் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச கலா மன்றம் கலைச்செல்வியின் கலைவிழாவில் "கலைச்செல்வன்" என்ற பட்டம் வழங்கியது. 1973 ஆம் ஆண்டு இணுவில் பரமானந்த நூல் நிலையப் பொங்கல் விழாவிலே சபா ஆனந்தர் "அபிநயஅரசகேசரி" என்ற பட்டத்தை வழங்கினார்.

கலைச்செல்வனின் புதல்விகளான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், கலாபவனத்திலும், திருமதி. நந்தினி ஜெகதீஸ்வரன், திருமதி. குமுதினி ஸ்ரீகாந்தன் ஆகியோர் கனடாவிலும், அவர் தம் பேர்த்தி திருமதி.தேவந்தி திருநந்தன் நடனத்துறை விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கலைப் பணியைத் தொடர்ந்து ஆற்றுகின்றனர்.

11.01.1976 இல் தில்லைக் கூத்தன் திருவடிகளை அடைந்து அமைதியும் ஆனந்தமும் பெற்றவர் கலைச்செல்வன். 13.01.2022 இன்று அவரது 100 ஆவது பிறந்த தினத்தில் இந் நடனப் பேராசானை நினைவு கூர்ந்து, அவர் கலைக்காற்றிய பணிகளை மனதிருத்தி, இளம் சந்ததியினர் இவற்றை அறிய ஆவன செய்து பரதநடனக் கலை உலகுள்ளவரை நிலைத்திருக்க நாம் அனைவரும் இணைவோம்.

**திருமதி.மதிவாணி விக்னராஜா.**

# யாரும் வெளியேறலாம்; உள்நுழையலாம்

## அரசின் கதவுகள் திறந்தே உள்ளன- பசில் அதிரடி

**(கொழும்பு)**

**அரசை விட்டு எவரும் வெளியேறலாம். அதேபோல் வெளியில் இருந்து எவரும் அரசுடன் இணையலாம். அரசின் கதவுகள் திறந்தே உள்ளன என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் வைரஸ் தொற்றால் வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை உடனே நிமிர்த்த முடியாது. கடந்த அரசும் எமது அரசிடம் ஆட்சியைக் கையளிக்கும்போது நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச்சியில் இருந்ததை எவ்ரும் மறந்திடலாகாது என பசில் தெரிவித்தார். (நி-5)

# சர்வதேச தீவிரவாதத்துடன் தொடர்புடைய 6 பேர் கைது- பலருக்கு வலைவீச்சு

(கொழும்பு)

சர்வதேச பொலிஸ் அமைப்பான "இன்டர்போல்" இலங்கை பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்குரியவர்களும் வெளிநாடுகளின் தீவிரவாதிகளும் இதில் அடங்குவதாக இன்டர்போல் அமைப்பின் இணையத் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒபரேஷன் ஃப்ளைகேட்ச்சர் II என்ற குறியீட்டுப் [illegible] ப்பட்ட (2021 நவம்ப[illegible]) ஐந்து நாள் நடவடிக்கையின் போதே இந்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், உலகளவில் மேலும் கைதுகள் விரைவில் எதிர் [illegible] ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 280 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 160 | 170 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 450 | 700 | 550 | 400 |
| தக்காளி | 140 | 180 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 70 | 50 |
| கோவா | 250 | 260 | 240 | 300 |
| கரட் | 300 | 420 | 400 | 400 |
| பூசணி | 80 | 70 | 80 | 100 |
| புடோல் | 200 | 160 | — | 300 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 150-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 300 | 350 | 350 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 120 |
| பயற்றங்காய் | 350 | 300 | 350 | 400 |
| லீக்ஸ் | 320 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | — | 340 | — | 400 |
| கறிமிளகாய் | 400 | 600 | 600 | 600 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 300 | 300 | 250 | 320 |
| கத்தரிதம்புள்ள | 280 | 260 | — | 280 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 150 | 160 | 150 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-90 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 280 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 400 | 500 | — | — |
| முள்ளங்கி | 140 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 30 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணத் திட்டங்களினால் நிதி நிலைமை மேலும் மோசமடையும்

## சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனம் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கை அரசாங்கத்தினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட நிவாரணங்கள் தொடர்பில் சர்வதேச நிதி தரப்படுத்தல் நிறுவனமான மூடிஸ் நிறுவனம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.**

இந்த நிவாரணத் திட்டங்களினால் இலங்கையின் நிதி நிலைமை மேலும் மேலும் உக்கிரமடையும் என அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுமார் 229 பில்லியன் ரூபாய் பெறுமதியான நிதி நிவாரண திட்டங்களை மக்களுக்கு அறிவித்திருந்தார்.

இந்த நிவாரணத் திட்டங்களினால் மேலதிகமாக நிதி திரட்ட நேரிடும் அல்லது பணத்தை மேலும் அச்சிட நேரிடும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளினால் நாட்டின் பொருளாதார நிலைமை மேலும் மோசமடையக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக மூடிஸ் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

# மீண்டும் வலம் வரும் மண்ணெண்ணெய் வண்டில்கள்



(கொழும்பு)

நாட்டில் தற்போது எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அதனை பெறுவதற்கு நாளாந்தம் மக்கள் நீண்ட வரிசையில் காத்து கிடக்கின்றனர்.

இந்த நிலையில் தற்போது கொழும்பின் சில பகுதிகளில் மண்ணெண்ணெய் வண்டிகளை வைத்திருந்தவர்கள் மீண்டும் மண்ணெண்ணெய் விற்பனையை ஆரம்பித்துள்ளனர்.

எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பலர் மண்ணெண்ணெய் அடுப்பை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டதால் மண்ணெண்ணெய்க்கு கடும் கிராக்கி நிலவி வருகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய் வாங்க மக்கள் வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வரிசையில் காத்திருப்பதை விட வீட்டிற்கு அருகில் வரும் மண்ணெண்ணெய் வண்டியில் இருந்து மண்ணெண்ணெய் வாங்குவது இலகுவானது என்பதால் கொழும்பில் மண்ணெண்ணெய் வியாபாரம் வெற்றிகரமாக நடைபெற்று வருவதாக மண்ணெண்ணெய் விற்பனை செய்யும் நபர் ஒருவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (நி)

# அரிசி விலை அதிகரிக்கப்பட மாட்டாது

## வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

எந்தவிதமான நிலைமையிலும் நாட்டரிசி 105 ரூபாயை விட அதிக விலைக்கும் சம்பா அரிசி 130 ரூபாவை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படாத வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், வர்த்தக அமைச்சர் என்ற அடிப்படையில், இந்தியாவிலிருந்து இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் நாட்டரிசியையும் ஒரு இலட்சம் மெற்றிக் தொன் சம்பா அரிசியையும் தனியார் துறையின்றி அரச வணிக கூட்டுத்தாபனத்தின் மூலம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவித்தார்.

எனவே செயற்கையாக அநீதியான முறையில் விலை அதிகரிப்பை மேற்கொள்ளத் திட்டமிடுபவர்களுக்கு அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.



இதேவேளை, நுகர்வுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட அரசாங்கத்தால் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார் (நி)

# அரச வங்கியொன்றில் பணியாற்றும் 17 ஊழியர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

கொழும்பில் உள்ள அரச வங்கியொன்றில் பணியாற்றும் 17 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

# சிந்தனைத் திறன்

சிந்தனை தான் நம் மூளை செய்யும் காரியங்களிலேயே மகத்தானது. சிந்தனையின் அடிப்படையில் முடிவுக்கு வருபவன் சிக்கல் வலையில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும் எந்தப் பிரச்சினை சேற்றிலும் சிக்கிக் கொள்ளாதிருக்கவும் சிந்தனை உதவுகிறது.

ஒரு விடயத்தில் முடிவுக்கு வருவது என்பது சிறு பிள்ளைகள் விளையாடும் ஒற்றையா ரெட்டையா விளையாட்டல்ல. எதிலும் சிந்தித்தே முடிவுக்கு வரவேண்டும்.

நல்லதா? கெட்டதா? இலாபமா? நட்டமா? நற்பெயர் மிஞ்சுமா? அவப்பெயர் மிஞ்சுமா? என்ற நோக்கிலேயே சிந்தை செலுத்தப்பட வேண்டும். பிற்காலப் பாதிப்புக்களைச் சிந்திக்கும் ஆற்றல் உள்ளதால்தான் உலகில் ஏராளமான நல்ல உள்ளங்கள் மிச்சம் மீதி இருக்கின்றன.

ஒரு நிமிடச் சிந்தனை கூட ஓராயிரம் பலன்களை அளிக்க வல்லது.

சிந்தனை என்பது நம்முள் இருக்கும் சிறந்ததொரு சாதனம். அந்தச் சாதனம் உயிர் காக்கும் நண்பனாக, உற்ற தோழனாக, உங்களுக்கு உறுதுணையாக விளங்க என்றும் தயாராக இருக்கிறது. ஆனால் பலர் ஏனோ இந்த நண்பனை புறக்கணித்தே வருகிறார்கள்.

இந்த நண்பனை நன்கு பயன்படுத்திக் கொண்டாலோ, எங்கும் எதுவும் எளிது.

சிந்தனை என்பது ஒரு சிறந்த பந்து. அதைக் குருட்டாம் போக்காகப் பயன்படுத்துவதை விட எதிரி என்னும் விக்கெட்டை நோக்கிக் குறிபார்த்து எறிந்து சாய்க்கவும் வெற்றி என்னும் கோல்களைப் போடவும் முயல வேண்டும்.

நம்முடைய ஒவ்வொரு செயலிலும் தர்க்கம் இருக்க வேண்டும் என்றால் அதில் சிந்தனைக் கலப்பு நிச்சயம் வேண்டும்.

சிலர் சிந்திப்பது என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். மண்டையைப் பிய்த்துக் கொண்டு மேலும் குழப்பமடைவது என்பது நல்ல சிந்தனையின் அறிகுறி அல்ல.

ஒரு பிரச்சினை நம்மீது வீசி எறியப்பட்டால் உடனே அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடக் கூடாது. பிரச்சினையால் பதறிப் போயிருக்கும் அந்தச் சமயத்தில் நம்மால் ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியாது.

சற்றேனும் சிந்தித்து முடிவெடுக்க நேரமிருக்கிறதா? என்று பார்க்க வேண்டும். இருந்தால் அந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சற்றுத் தாமதமானாலும் பரவாயில்லை. தாமதத்தினால் வரக்கூடிய நட்டத்தை விட பதற்றமான சூழ்நிலையில் எடுக்கப்படும் அவசர முடிவே அதிக நட்டத்தை தரும்.

நேரமற்ற சூழ்நிலை நிலவினால் அதற்குள் முழுக் கவனத்தையும் பிரச்சினை மீது செலுத்தி ஒரு முடிவுக்கு வர வேண்டும். இப்படியெல்லாம் சிந்தித்து முடிவுக்கு வந்தால் அவை பெரும்பாலும் நமக்குச் சாதகமாக அமையும்.


அதையும் மீறி நமக்கு பழிபாவமோ நட்டமோ ஏற்படுமாயின் நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டிய அவசியமிராது. மாறாக இயற்கை விட்ட வழி என்றாவது நாம் ஆறுதலடையலாம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## புத்தியுள்ள பெண் ஆடு



பலநாட்கள் காத்திருந்த நரிகளால் பெண் ஆடை தொட முடியவில்லை. கடைசியில் இரண்டும் ஒரு திட்டம் தீட்டியது. பெண் நரி குகை வாயில்வரை சென்று உரக்கப் பேசியது.

**பெண் நரி:** இனிய தோழியே உன்னை தோழியாக்கிக் கொள்ளவே வந்தேன். நான் மிகவும் தனிமையில் உள்ளேன். எனக்கு நண்பர்கள் யாரும் இல்லை.

எனது ரகசியங்களை பங்கிட ஆள் இல்லை. உன்னை எனக்கு மிகவும் பிடிக்கும். நீ என் தோழியாய் இரு. என்னுடன் உனது துன்பங்களையும், சந்தோஷங்களையும் பரிமாறிக் கொள்ளலாம்.

எனக்குத் தெரியும் நீ என்னை வெறுப்பாய் என்று. ஏனென்றால் எனது கணவர் மிகக் கொடூரமானவர். எனது கணவர் தவறுகளுக்கு இப்போது வருந்துகின்றார்.

தற்போது திருந்தி வழி மாற நினைக்கின்றார். எந்த உயிருள்ள இனங்களையும் கொல்வதில்லை என்று உறுதி பூண்டுள்ளார். நாங்கள் பசும்புல், தாவரங்கள் என்று மாறி விட்டோம்.

இன்று பகல் உணவினைத் தர மிகவும் விரும்புகின்றார். உன்னை வரவேற்கவே என்னை இங்கு அனுப்பியுள்ளார் தயவு செய்து மறுக்காதே. பெண் ஆடு குகைக்குள்ளிருந்து பதில் சொன்னது.

**பெண்ஆடு:** இது தான் அழைப்பு என்றால் நான் நிச்சயம் பகல் உணவுக்கு வருகின்றேன். ஆனால் இங்கு சில விருந்தாளிகள் வந்து உள்ளார்கள். நகரத்திலிருந்து வந்து இங்கு என்னோடு தங்கி உள்ளார்கள்.

அவர்களையும் என்னோடு அழைத்து வர விரும்புகின்றேன். உங்களால் பகல் உணவை தந்து எங்களை சமாளிக்க முடியுமா?

பெண் நரி மேலும் பல ஆடுகள் உள்ளே இருப்பதாக கருதியது. அது பெண் ஆட்டிடம்.

**பெண்நரி:** யார் அவர்கள். எத்தனை பேர் உள்ளார்கள்.

**பெண் ஆடு:** எனது ஒன்று விட்ட சகோதர சகோதரிகள். அவர்கள் எல்லோரும் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள்.

நரியும் அதன் துணைவியும் நாய்கள் என்றதும் நடுங்கிப் போயின. அவைகள் காட்டின் வேறொரு பகுதிக்கு குடிபெயரத்தீர்மானித்தன. அங்கிருந்து இருவரும் ஓட்டம் பிடித்தனர்.


மீண்டும் திரும்பும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. பெண் ஆடு அந்த குகையிலேயே வசித்தபடி குட்டிகளை ஈன்றெடுத்து தனது குடும்பத்தை உருவாக்கிக் கொண்டது.

குழந்தைகளே பார்த்தீர்களா ஆட்டின் அறிவுத் திறமையை. அது போல் தான் ஆபத்தான தருணங்களில் நீங்களும் அறிவோடு நடக்க முற்பட வேண்டும். நீங்கள் துன்பப்பட மாட்டீர்கள்.

இந்த கதையின் நீதி என்னவென்றால் துன்பமான நேரங்களில் தெளிவான சிந்தனையோடு தெளிவாக முடிவு எடுக்கத் தெரிய வேண்டும்.

(முற்றும்)

# மகாபாரதம்




கோசலம் என்னும் யாகங்களில் ஒவ்வொருவருக்கும் வேறுபாடு கருதாது பத்துப் பத்து பசுக்களாக நூறு கோடி பசுக்களையும் பால் கறக்கப் போதிய பொன் பாத்திரங்களையும், வெண் பாத்திரங்களையும் தானம் செய்தேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை.

பாகிலி என்னும் இடத்தில் பிறந்தவையும், பொன்மாலைகள் அணிந்தவையுமான பதினாயிரம் வெள்ளைக் குதிரைகளை அளித்தேன்.

ஒவ்வொரு யாகத்திலும் நாள்தோறும் எட்டுக் கோடி, பத்துக் கோடி என வாரி வாரித் தந்தேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை. பொன் மாலைகளுடன் காது கறுத்தவையும் பச்சை நிறம் உள்ளவையுமான குதிரைகள் பதினேழு கோடிகளைத் தந்தேன்.

பொன்னால் செய்யப்பட்ட, பொன் மாலைகளுடன் கூடிய பதினெட்டாயிரம் தேர்களை அளித்தேன். அவற்றின் பயனாலும் இங்கு நான் வரவில்லை.

ஆயிரமாயிரம் அரசர்களை வென்று, எட்டு ராஜசூய யாகங்களைச் செய்தேன். அழகும், பெருங் கொண்டைகளும் உடைய எண்ணாயிரம் வெள்ளைக் காளை மாடுகளையும், பசுக்களையும், பொன் குவியலையும், இரத்தினக் குவியல்களையும், ஆயிரக்கணக்கான கிராமங்களையும் அளித்தேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை. ஒரு யோசனை நீள அகலமுள்ள மாமரங்கள் நிறைந்த காட்டைக் கொடுத்தேன். அவற்றின் பயனாலும் இங்கு நான் வரவில்லை.

அசுவமேத யாகங்கள் பல செய்தேன். ஒவ்வொரு நாளும் முப்பது அக்கினிகளில் ஓமம் செய்தேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை.

முப்பதாண்டு காலம் சினம் தவிர்த்து யாராலும் செய்தற்கரிய துவாரணம் என்னும் யாகத்தை விடாமல் செய்தேன்.

எட்டு சர்வமேத யாகங்களும் ஏழு நாமேத யாகங்களும் செய்தேன். அவற்றின் பயனாலும் நான் இங்கு வரவில்லை.

சரயு நதியிலும், நைமிசாரணயத்திலும் பத்து இலட்சம் பசுக்களைத் தானமாக வழங்கினேன். அதனாலும் இங்கு வரவில்லை.

ஓர் இரகசியம் இந்திரனால் குகைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதனை பரசுராமர் தன் தவத்தால் உணர்ந்தார்.

அதனைச் சுக்கிரர் மூலமாக நான் அறிந்தேன். அதன் காரணமாக ஆயிரமாயிரம் அந்தணர்க்குப் பொன்னையும், பொருளையும் தானம் செய்தேன். அவற்றாலும் நான் இங்கு வரவில்லை.

உபவாசத்தால்தான் நான் இங்கு வந்தேன். இந்த உபவாசத்தை விட மேலான தவத்தை நான் எங்கும் அறியவில்லை" என்று கூறி முடித்தான்.

ஆதலால் தருமா நீயும் உபவாசத்தை மேற்கொண்டு, நற்கதி அடைவாயாக" என்று பீஷ்மர் தருமருக்கு உரைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது. – காந்திஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இருக்கும் இடம்விட்டு இல்லாத இடம்தேடி...

இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்றுவிட்டது.

உணவுப் பொருட்களின் விலை ஏற்றம் சொல்லி மாளா.

பாண், பணிஸ், பால்தேநீர், சிற்றுண்டி வகைகள், மதியஉணவு என அனைத்தினதும் விலைகள் இமயத்தைத் தொட்டுவிட, ஏழைக் குடும்பங்கள் மற்றும் தனித்து வாழ்பவர்கள் மிகப்பெரும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த நிலையில் உலக நாடுகளிடம் கையேந்தும் கந்தறு நிலைக்கு நாடு வந்துவிட்டது. எனினும் இலங்கை ஆட்சியாளர்களின் வாய்க்கொழுப்பு கரையாத காரணத்தால் அவர்கள் ஏந்துகின்ற பிச்சா பாத்திரத்தை வெளிநாடுகள் கண்டுகொள்வதாக இல்லை.

இவை ஒருபுறம் இருக்க, எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படலாமென்ற செய்திகளும் சுழற்சி முறையிலான மின்தடையும் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநோயின் உச்ச அறிகுறிகளாம்.

மனிதர்களுக்கு நோய் வந்தால் அதைக் குணப்படுத்தும் பொறுப்பு மருத்துவருடையது.

அதேபோல நாட்டின் பொருளாதாரத்துக்கு மந்தம் ஏற்பட்டால், அதனை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பு பொருளியல் வல்லுநர்களுடையது. ஆனால் எங்கள் நாட்டில் பொருளாதார மந்தம் தொடர்பில் பொருளியல் வல்லுநர்கள் வாய் திறந்ததாகத் தெரியவில்லை.

அதாவது பேரினப் பொருளியற் கொள்கைகள் எதுவும் பின்பற்றப்படாத நாடாக இலங்கை இருப்பதுதான் விந்தையிலும் விந்தை.

நிலைமை இதுவாக இருக்கையில், எரிகிற வீட்டில் எடுப்பது மிச்சம் என்பதுபோல இலங்கையின் கந்தறு நிலையை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள எத்தனிக்கும் வெளிநாடுகள்; நடுத்துண்டு நமக்கு என்று போட்டி போடுகின்றன.

ஐயகோ! இதனைப் பார்க்கும்போது இதயம் கனக்கிறது.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று மார்தட்டி நிற்கும் பேரினவாதக் கொடூரர்களால் அழகிய இலங்காபுரி பஞ்சத்திலும் பசியிலும் பரிதவிக்கப் போகிறது.

அதைவிடப் பெருங்கொடுமை இல்லாத இடம்தனில் பொருளாதாரத்தைத் தேடுகின்ற இலங்கை ஆட்சியாளர்களின் அறியாமை ஆகும்.

எம்மைப் பொறுத்தவரை பொருளாதாரத் தை தூக்கி நிறுத்தக்கூடியவர்கள் புலம்பெயர் ஈழத் தமிழர்கள். அவர்கள் நினைத்தால் இலங்கையின் பொருளாதார மந்தநோயைக் குணப்படுத்த முடியும்.

அதை அவர்கள் செய்யவேண்டுமாயின், வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் சமஷ்டியை உருவாக்குவதே ஒரே வழியாகும்.

எனினும் இருக்குமிடம் விட்டு இல்லாத இடம்தனில் தேடுகின்ற பேரினவாதிகளுக்கு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துகின்ற மனப்பக்குவம் ஏற்படுமா? என்பதுதான் சந்தேகம்.

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு ஈவினையில் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈவினை கிராம சமுர்த்தி உத்தியோகத்தருக்கு அக்கிராமத்திலுள்ள தந்தை மற்றும் மகனால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நேற்று புதன்கிழமை ஈவினை கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் சமுர்த்தி கூட்டம் நடைபெற்றது. இதன்போது திடீரென உள்ளே புகுந்த தந்தை மற்றும் மகனால் சைக்கிள் செயின் கொண்டு கூட்டத்தில் கலந்துகொண்ட குடும்பஸ்தர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் அவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் அங்கு நின்றவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்கும்படி தெரிவித்தனர். சமுர்த்தி உத்தியோகத்தரும் சுன்னாகம் பொலிஸாருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டாம் எனவும் அப்படி அறிவித்தால் வீதியில் வைத்து வெட்டுவோம் எனவும் தந்தை மற்றும் மகனால் குறித்த சமுர்த்தி உத்தியோகத்தருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் சமுர்த்தி உத்தியோகத்தரும் பொலிஸாருக்கு அழைப்பு மேற்கொள்வதை நிறுத்திவிட்டார்.

எனினும் சம்பவம் தொடர்பில் தாக்குதலில் காயமடைந்தவரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம)

## யாழ். மாநகர சபை ஏற்பாட்டில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் முதன் முறையாக முத்தமிழ் விழா எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30 மணி முதல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முத்தமிழ் விழா தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற போதே யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலை முதல் இரவு வரை இயற்துறை, இசைத்துறை, நாடகத்துறை என மூன்று அமர்வுகளாக நிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது கம்பவாரிதி இ.ஜெயராஜ் குழுவினரின் வழக்காடு மன்றம், பாலமுருகன் மற்றும் குமரனின் நாதசங்கமம், சத்தியவான் சாவித்ரி நாடகம், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகம் உட்பட பல நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. (ம-18.33)

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முற்றவெளியில் பொங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகள் குடும்பத்துடன் இணைய வேண்டும் என பிரார்த்தித்து இன்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் பொங்கல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதற்கு மக்கள், அரசியல் பிரமுகர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அரசியல் கைதிகளது விடுதலைக்கான குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படவுள்ள நிலையில் தமிழ் மக்கள், குறிப்பாக தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என நாம் காத்திருந்து காலங்கள் கடந்து விட்டன. வெறுமனே 14 கைதிகளை விடுதலை செய்து விட்டு ,அனைத்து கைதிகளையும் விடுவித்ததுபோல அரசு காட்டிக் கொள்கிறது.

இந்த புதிய ஆண்டில் அரசு இக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தனர். (ம-18.33)

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திருநெல்வேலி ஆடியபாதம் வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்.திருநெல்வேலி சந்தைக்கு முன்பாகவுள்ள ஆடியபாதம் வீதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்காக வீதியின் ஒருபகுதி ஒருவழி பயணத்திற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 5 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை ஆடியபாதம் வீதியில் அரசடி அம்மன் கோவில் சந்தியில் இருந்து திருநெல்வேலி சந்தி நோக்கிய பயணம் அம்மன் வீதி மற்றும் கலாசாலை வீதிக்கு திசை திருப்பப்பட்டு. திருநெல்வேலி சந்தியில் இருந்து கல்வியங்காட்டுச் சந்தி நோக்கிய பயணத்திற்கு மட்டும் ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.மயூரன் அறிவித்துள்ளார். (ம-18.33)

## கோவிட்டால் 14 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் 14 பேர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரணங்கள் நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15, 169 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## சத்திய தரிசனம்



### கடவுளின் கரங்களில் உங்களை ஒப்படைத்து விடுங்கள்

- வெற்றியோ, தோல்வியோ அவன் அளிக்கட்டும். அதனாலென்ன? அவர் உங்களைச் சிரமப்படுத்துவதில் உறுதியாயிருக்கலாம். முடிவில் பார்க்கும்போது அது உங்கள் நன்மைக்காகவே கூட இருக்கலாம். உங்களால் எப்படி அதை அறிந்துகொள்ள முடியும்? நீங்கள் யார் அதை அறிய சிறப்பாகச் செயல் புரிந்து விட்டுச் சும்மாயிருங்கள்!
- நீங்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வாழ புதிய வீடுகள் கட்டிக் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். அங்கே கடவுளைப் பிரதிஷ்டை செய்து வைக்க வேண்டுமென ஆசைப்படுகிறேன். நான் சொல்லுவது செங்கல், சுண்ணாம்பு, வீடு அல்ல. நல்ல எண்ணங்கள், நல்ல சொற்கள், நல்ல செயல்கள், நல்ல சுற்றம். அங்கே நீங்கள் அமைதியாக வாழ இயலும். அனைவரும் கூட்டாக அந்த வீடு கட்டி கிரகப்பிரவேசத்திற்கு என்னை அழைக்க முடியும். நான் ஆர்வமுடன் இசைவேன். அவ்வீடுகள் என்னுடையவை. நான் வந்து உள்ளே நுழைய அழைப்புகூடத் தேவையில்லை. ஆன்மிக ஆனந்தத்துக்கான வீடு அது! என் இருப்பிடம் என்னை விரும்பும் தூய இதயம்தான்.
- பக்தி உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும். கடவுளின் கருணையைக் கொண்டு வரும். மேகங்கள் திரண்டு வயல்கள் மீது மழை பொழிய வேண்டும். உயிரூட்டும் நீரைத் தாவரங்கள் மேலெழுந்து பருக முடியாது. பக்தி கடவுளைக் கீழே நம்மிடம் கொண்டுவரும் ஆற்றல் பெற்றது.
- பக்தன் தன் உடல், மனம், வாழ்வு அனைத்தையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால் அவர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். ஏனென்றால், அவர் எப்போதும் நம்முடனேயே இருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

1. வெல்டிங் வேலை தெரிந்தவர்கள்
2. Tile பதிக்கும் வேலை தெரிந்தவர்கள் (9641)

077 906 3062

## உடம்புக்குள்...

இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

"பெண்ணுக்கு கர்ப்பப்பையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அதனை அகற்றுவதற்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது.

அதனால் பிரபல தனியார் மருத்துவமனையில் கடந்த டிசம்பர் 10ஆம் திகதி பெண்நோயியல் சத்திரசிகிச்சை வல்லுநர் ஒருவரினால் பெண்ணின் கர்ப்பப்பை அகற்றும் அறுவைச் சிகிச்சை இடம்பெற்றது.

இந்த நிலையில் அந்தப் பெண்ணுக்கு திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக கடந்த 10 ஆம் திகதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மந்திகை ஆதார மருத்துவமனை சட்ட மருத்துவ வல்லுநர் கனகசபாபதி வாசுதேவா முன்னிலையில் பெண்ணின் சடலம் நேற்று உடற் கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சத்திரசிகிச்சையின்போது பெண்ணின் உடலுக்குள் 50 சென்ரிமீற்றர் நீளம் 10 சென்ரிமீற்றர் அகலமுள்ள துணி ஒன்று வைத்து தையலிடப்பட்டமை கண்டறியப்பட்டது.

அவரது உயிரிழப்புக்கு அந்த துணியினால் ஏற்பட்ட கிருமித்தொற்றே காரணம் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-18,33,60)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் கடை ஒன்றுக்கு காசாளர் தேவை.(பெண்)

தொடர்பு (C-3520)


076 192 3444

# மரண அறிவித்தல்

## செல்லப்பா தர்மலிங்கம் B.Sc(cey)

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர், கொழும்பு பிரபல பௌதிகவியல் ஆசிரியர் – brighton institute colombo, demonstrator - peradeniya university, பௌதிகவியல் ஆசிரியர்– நைஜீரியா )

பிறப்பு - 26.09.1937 இறப்பு - 11.01.2022



வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை சுவிசுத்தராமவை வசிப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தர்மலிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை *(11.01.2022)* இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மங்கையற்கரசி தம்பதியினரின் அருமைப் புத்திரனும் பண்டிதர் பொன்னுத்துரை - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் வைத்தியர் ஜனகன் சதாபானுவின் (லண்டன்) பாசமிகு தந்தையும் பாலசுந்தரம்பிள்ளை ஜனகனின் மாமனும் சிறிஸ்கந்தனின் ஆசைப்பேரனும் சிவலோகநாதன் இராஜேஸ்வரி (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் சிவலோகநாதன் (கனடா), யோகேஸ்வரி, சாந்தினி(அவுஸ்திரேலியா), திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கலியாணசுந்தரம், பேராசிரியர். பொன்.பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் விமலேந்தின்(கனடா), எந்திரி பாலேந்திரன்(கனடா), திருமதி விமலா விஜயகுமார்(கனடா), எந்திரி யோகேந்திரன் (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (லண்டன்), புவனேந்திரன்(லண்டன்), நிர்மலாதேவி லோகராஜா(கனடா) காலஞ்சென்ற வற்சலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (13.01.2022) பிற்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் வேலணை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்டும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"திருப்பதி", பிரதான வீதி
1 ஆம் வட்டாரம், வேலணை. (9616)

தகவல்:
வைத்தியர் ஜனகன் சதாபானு (மகள்)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **கமலினி சிவயோகன்**
அவர்களின் அன்புத் தாயார்

**சாந்தநாயகி வினாயகமூர்த்தி**

அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (9637)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி **சிவகாமசுந்தரி தயாளன்**
அவர்களின் அன்புச் சகோதரன்


**தெய்வேந்திரம் பஞ்சாட்சரம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி (9638)

# மரண அறிவித்தல்

## சுப்பையா இராஜேந்திரன்



யாழ். காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராஜேந்திரன் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (02-01-2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சுப்பையா - சற்குணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - பாக்கியலஷ்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின்(நீராவியடி) அன்புக் கணவரும் தண்யா, சியாமளன், சாரங்கன், தர்ஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் சுலோஜனாதேவி, விமலரஞ்சினிதேவி, கனகநாயகம், இரவீந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தயாழினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற வினாயகமூர்த்தி மற்றும் கணேசமூர்த்தி, நிர்மலாதேவி, மாலதி(பிரான்ஸ்), பார்த்தீபன்(பிரர்ன்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற பத்மாசனி மற்றும் யோகநாதன்(கனடா), காலஞ்சென்றவர்களான உலகநாதன், இராஜேஸ்வரி மற்றும் பரமநாதன்(கனடா), தர்மநாதன்(ஜேர்மனி), கேதாரநாதன்(பிரான்ஸ்), தேவமலர்(கனடா), பரமகுருநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், கமலாதேவி மற்றும் விமலாதேவி(கனடா), சச்சிதானந்தன்(ஜேர்மனி), ஞானம்பிகை(கனடா), உஷாராணி(ஜேர்மனி), தவமலர்(பிரான்ஸ்), சிவதாஸ்(கனடா), சகிலா(லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள்இன்று (13.1.2022) வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நண்பகல் 12.30 மணியளவில் **Funerarium Des Joncherolles 95 Rue marcel Sember, 93430 villentaneuse, France** இல் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
S. கனகநாயகம்(சந்திரன்)
றஞ்சனாஸ் புடைவையகம்,
சுன்னாகம்.
077 939 1883

S.றவீந்திரன்(பிரான்ஸ்)
+33777337009 (9639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள்...

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் முன்னாள் பரிசோதகர் நியோமல் ரங்கஜீவ அனைத்துக் குற்றச்சாட்டுகளிலும் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

கலவரம் தொடர்பில் சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிபதிகளான கிஹான் குலதுங்க, பிரதீப் ஹெட்டியாராச்சி மற்றும் மஞ்சுள திலகரத்ன ஆகிய மூவரடங்கிய விசேட நீதிமன்ற தீர்ப்பாயம் முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது. (ம)

## 5 தமிழ்...

ஆணைக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர்.

அவர்களை பொறுப்பேற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் அவர்களின் வீடுகளில் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அறிமுகமான...

முன்தினம் செவ்வாய்க்கிழமை இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த யுவதியின் தொலைபேசிக்கு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வந்திருந்த தவறுதலான தொலைபேசி அழைப்பின் ஊடாக அறிமுகமான இளைஞனுடன் நட்பு ஏற்பட்டு பின்னர் அது காதலாக மாறியுள்ளது.

இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காத நிலையில் காதலித்து வந்துள்ளனர்.

அந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த இளைஞன், யுவதியை திருமணம் செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், வீட்டை விட்டு வெளியேறி தன்னுடன் வருமாறும், அதன் போது வீட்டில் இருந்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை எடுத்து வருமாறும் கூறியுள்ளார்.

இளைஞனின் ஆசை வார்த்தையை நம்பிய குறித்த யுவதி, தன்னுடைய சங்கிலி உள்ளிட்ட நகைகளையும் 40 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் எடுத்துக்கொண்டு நேற்று முன்தினம் காலை இளைஞன் கூறிய இடத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு நின்றிருந்த குறித்த இளைஞன் அப்பெண்ணை தனது மோட்டார் சைக்கிளில் அழைத்துக்கொண்டு, தன்னுடைய தாய்க்கு அறிமுகம் செய்து வைப்பதாக, வடமராட்சி திக்கம் பகுதிக்கு அழைத்து சென்றுள்ளார். நடமாற்றம் அற்ற பகுதியில் தண்ணீர் வாங்கி வருவதாக கூறி அவ்விடத்தில் யுவதியை தனியே விட்டுவிட்டு சென்றுள்ளார்.

இளைஞன் சென்று சில நிமிடங்களில் மூன்று இளைஞர்கள் அவ்விடத்திற்கு சென்று யுவதியை பலாத்காரமாக வன்புணர்ந்து உள்ளனர். பின்னர் யுவதியை அழைத்து சென்ற இளைஞனும் அவ்விடத்திற்கு வந்து நான்கு பேருமாக யுவதியை கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். பின்னர் யுவதியிடம் இருந்த 40 ஆயிரம் ரூபாய் பணம், நகைகள், தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்த பின்னர், யுவதியை அழைத்து வந்த இளைஞன் யுவதியை மீண்டும் தனது மோட்டார் சைக்கிளில் அழைத்து சென்று யுவதியின் கிராமத்திற்கு அருகில் வீதியில் இறக்கி விட்டு தலைமறைவாகியுள்ளார். இச் சம்பவம் தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர். (ம-18,33,60)

## யாழ். பல்கலை...

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திருநெல்வேலி பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு தங்கி இருந்து கல்வி கற்றுவரும் விஞ்ஞான பீடம் மூன்றாம் வருடத்தை சேர்ந்த மாணவர்களின் வீட்டிற்குள் புகுந்த நான்காம் வருட மாணவர்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த மூன்றாம் வருடத்தினை சேர்ந்த இரு மாணவர்கள் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நான்காம் வருட மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த ஒருமாத கால பகுதிக்குள் விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற மூன்றாவது மோதல் சம்பவம் இதுவாகும். (ம-18,33)

## ராஜபக்ஷ...

பாளர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாட்டின் அரசானது மக்களின் அத்தியாவசியமான தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக செயற்பட வேண்டும்.

வெளிநாட்டில் இருந்து பொருட்களை கொள்வனவு செய்து இந்த மக்களுக்கு அத்தியாவசிய சேவைகளை வழங்க முடியாது இந்த அரசு திண்டாடுகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்து தற்பொழுது மக்கள் வாழ முடியாதுள்ளார்கள்.

குறிப்பாக உணவு, பானங்களை நாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலை காணப்படுகின்றது. அரசுக்கு எதுவுமே செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது. பொதுவாக குழந்தைகள் தாய்மாருடைய போசாக்கு மட்டம் குறைந்திருக்கிறது.

அவர்களுக்குரிய பால்மா மற்றும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இந்த கோட்டப்பய அரசு காணப்படுகின்றது.

மக்கள் வாழ்வதற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது.

நாட்டுக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. ஆனால் வெற்றி கொள்வதற்கு வீர தீரமான அரசு, புத்தி சாலித் தனமான அரசு என கூறி தற்பொழுது அரசு பலமில்லாத அரசாங்கமாக மாறியுள்ளது.

இந்த அரசு முற்றுமுழுதாக பெயிலான அரசாங்கம் என்றுதான் கூற வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக ஒரு பலமான அரசினை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும்.

குறிப்பாக நமது ஆட்சியில் இனவாதம், மதவாதம் மற்றும் ஒரு துண்டு நிலம் கூட வேறு நாட்டுக்கு கொடுக்காத சிறந்த ஒரு நாட்டினை உருவாக்குவதற்கு அனைவரும் நாங்கள் ஒன்றுபட வேண்டும் என்றார். (ம-18,33)

## அனைத்து...

வித்துள்ளார்

நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு தற்போது சகல வழிகளிலும் பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்குக் கொரோனாப் பெருந்தொற்றே காரணம். இதை மக்கள் நன்குணர்வார்கள்.

ஆனால், எதிரணியினர் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கின்றனர். அவர்கள் நாடடெங்கும் சென்று அரசுக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

இவ்வருடத்தில் நாடு முன்னோக்கிச் செல்லும் வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்துள்ளோம். அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் என அனைத்து வழிகளிலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இவ்வருடம் தீர்வுகளை அரசு வழங்கும்" என்றார். (ம)

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1197
வெற்றி இலக்கங்கள்: கடகம் 5 1 6 2 9 7

### மெகா பவர்
திகதி 12/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0993
வெற்றி இலக்கங்கள்: L 18 46 49 64 76

### சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2022/01/12
சீட்டிழுப்பு இலக்கம் 1665
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 01 14 28 53

### மஹஜன சம்பத
திகதி 2022/01/12
சீட்டிழுப்பு இலக்கம் 4645
G 9 5 8 4 0 2

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 12.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2940
வெற்றி இலக்கங்கள்: I 17 29 44 57

### தன நிதானய
திகதி - 2022.01.12
சீட்டிழுப்பு இலக்கம் - 675
X 26 31 49 69

### அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1448
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 12.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,042,620
வெற்றி இலக்கங்கள்: 04 49 60 76 N

### சனிதா
சீட்டிழுப்பு இல: 3783
சீட்டிழுப்பு திகதி: 12.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,791,980
வெற்றி இலக்கங்கள்: 12 32 60 64 V

### Super Ball
Draw Number சீட்டிழுப்பு வாரம் 1622
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2022/01/12
Colour நிறம் செம்மஞ்சள்
Week Days Name தினம் புதன்
Y 26 37 38 44
Next Jackpot அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,195,532/-

### ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,422,835/-
Draw Date திகதி 2022/01/12
Draw Number வெற்றி வாரம் 3334
Colour வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 03 04 11 36 மேஷம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,095,920/-

### லொத்தோ 12
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: P 21 09 18 35 40
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 203,502,967/-
சீட்டிழுப்பு வாரம் 798
வர்ணம் பச்சை
திகதி 2022.01.12 புதன்கிழமை

### ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1802
சீட்டிழுப்பு திகதி 2022/01/12
வெற்றி இலக்கங்கள்: 05 31 47 55 G
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 29,970,756/-
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடிப் பாதையுடன் 39 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

[ மேட்டுநிலம், நிலப்பரப்பு ]
நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோமீற்றர் தூரம்
ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்

(9632)

தொடர்பு
077 911 6983, 077 658 5999
077 288 0152, 077 623 4204

## உதவியாளர் தேவை

யாழ். நகரில் உள்ள கிளினிக் ஒன்றுக்கு பகுதி நேரமாக பணியாற்றக் கூடிய பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு (C-3516)
077 375 4490
077 220 2769

## தேவை

எமது கணக்கியல் நிறுவனத்திற்கு கணக்கியல் பயிலுனர்கள் தேவை. GCE(A/L) வர்த்தகத் துறையில் சித்தியடைந்தவர்கள். Chartered, CIMA, HNDA மாணவர்கள்

077 906 3062

## +653

இலங்கையில் கோவிட் தொற்று உறுதியான மேலும் 653 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய, நாட்டில் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 593,725 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## காணி,வீடு விற்பனைக்கு

நாவற்குழி பேச்சியம்மன் கோவிலுக்கு அருகாமையில் 2 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (9626)

077 541 0819
021 222 6861

## காணி விற்பனைக்கு

காரைநகரில் காணி விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம். (9625)

தொடர்பு
076 585 2685

## வேலை வாய்ப்பு

எமது பண்ணைகள் புதிதாக பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

விண்ணப்பிக்கக் கூடியவர்கள்:
- O/L வரை படித்தவர்கள்.
- அரச வேலையில் ஓய்வுபெற்ற அதிகாரிகள், ஆசிரியர்கள்.
- விவசாய, கால்நடை ஆர்வம்.அனுபவம் மிக அவசியம்.

சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9617)

076 825 7716 (ஆகாஸ்)

## வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும் (C-3492)

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்

IELTS Life Skills B1

வெளிநாடு செல்வதற்கான ஆங்கில அறிவினை பயிற்றுவித்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
0777-068-777 R1

## குத்தகைக்கு அல்லது விலைக்கு வேண்டும்

நெல் வயல் காணிகள், தென்னங்காணிகள், தோட்டக்காணிகள், பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள் செய்ய உகந்த காணிகள்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மன்னார், யாழ். மாவட்டங்களில்.

தொடர்பு (9635)
+9477 795 0439 / +94 (71) 703 0547
0041 79 3344733

## DCM - யாழ்.நகர்

### தமிழ்

மாபெரும் கருத்தரங்கு - 2022
காலம்: 14, 15, 16, 17 ஆம் திகதிகளில்
நேரம் : மாலை 1.00 - 4.30 மணிவரை

வழமையான சிரேஷ்ட தமிழ் ஆசிரியர்

வெளி மாணவர்களும் கலந்துகொள்ளலாம்.
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை (C-3517)

நிர்வாகம் : 077 011 9434

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்


- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3491)

0768226240 DHL

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் 17 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**




- நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

(9627)

தரகர் தேவையில்லை.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
077 814 7389 | 077 614 7333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.